# பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை –6

ந.க.எண்.014598/பிசி/2020, நாள் 25.03.2020

பொருள் பள்ளிக் கல்வி – கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு – ஒழுங்குமுறைகள் – அனைத்து வகை பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவித்தல் – சார்ந்து

பார்வை

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செ.கு.எண்.213, நாள் 15.03.2020 மற்றும் செ.கு.எண்.031, நாள் 16.03.2020
2. அரசாணை நிலை (எண்) 152, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் (பி1) துறை, நாள் 23.03.2020
3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி அறிக்கை நாள் 25.03.2020

------

பார்வை 1ல் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பத்திரிக்கைச் செய்திகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் கொரோனா வைரஸ் தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து இன்று வரை நடைமுறையில் உள்ளது.

2. பார்வை 3ல்காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மேலும், 24.03.2020 மாலை 6.00 மணி முதல் குற்றவியல் நடவடிக்கை சட்டம் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

3. இதன் காரணமாக அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் 1 முதல் 9ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இறுதித் தேர்வு நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, 1ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான பள்ளி இறுதித் தேர்வு இதன்மூலம் இரத்து செய்யப்படுகிறது. இக்கல்வியாண்டில்

அனைத்து வகை பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயின்ற அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அரசால் அறிவிக்கப்படுகிறது.

இது சார்பாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகளை இணையதளம் மற்றும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து பள்ளிகள் திறந்தபின் அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளித் தேர்ச்சி பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொண்டு தொடர் நடவடிக்கைகள் எடுப்பதை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது சார்ந்த அறிக்கையினை பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பிவைத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்./–––––
பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல் : அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9 – தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது

நகல் : பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை – 6 தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது

நகல் : தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6 தகவலுக்காககவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

நகல் : அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6 தகவலுக்காக அனுப்பப்படுகிறது

நகல் : மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6 தகவலுக்காககவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது